வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 26.06.2025 வியாழக்கிழமை இதழ் : 177 பக்கங்கள் : 12




# தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வை அரசுடன் இணைந்தே காணவேண்டும்

## மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 26

**தமிழ் மக்களுக்கு பிரச்னைகள் இருக்கின்றமையை நான் உணர்கிறேன். எனினும், பிரச்னைகளுக்கான தீர்வை அரசாங்கத்துடன் இணைந்துதான் மேற்கொள்ள வேண்டியதாகிறது - இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார்.**


நேற்றைய தினம் திருகோணமலைக்கு சென்ற அவர் ஜூப்லி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்றபோதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில், காணி அபகரிப்புகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறல், படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நீதி, இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், சர்வதேச நீதிப் பொறிமுறைகள் போன்ற பல விடயங்கள் பேசப்பட்டிருந்தன.

குறிப்பாக, போர் முடிவுக்கு வந்த பின்னரான சூழ்நிலையிலும் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் நிழல் யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செயல்படுகின்ற மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், பெண் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்று வரைக்கும் இலங்கை அரச புலனாய்வுத் துறையினரால் கண்காணிக்கப்பட்டும் - விசாரிக்கப்பட்டும் வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், தமிழ் பேசும் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும்

11



## நயினை அம்மனுக்கு இன்று கொடி

யாழ்ப்பாணம், ஜூன் 26

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

11

# உணர்வெழுச்சியுடன் செம்மணியில் ‘அணையா விளக்கு’ போராட்டம்!

- சீ. வீ. கே., அரச தரப்பினர் விரட்டப்பட்டனர்
- இளையோர் அதிகளவில் பங்கேற்பு

- த.பிரதீபன், பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூன் 26

செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரிய ‘அணையா விளக்கு’ போராட்டத்தின் இறுதி நாளான நேற்று மக்கள் உணர்வெழுச்சியுடன் கூடி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரி மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் அணையா விளக்கு போராட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின் இறுதி நாளான நேற்று பெருந்திரளாக மக்கள் கூடினர்.

முற்பகல் 10.10 மணிக்கு உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு, போராட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று நடந்த போராட்டத்தில் வடக்கு, கிழக்கு

11



## ஐ. நா. பணிமனையின் முன்பாக கவனவீர்ப்பு!

- த.பிரதீபன், பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூன் 26

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் யாழ். வருகையை முன்னிட்டு நல்லூரிலுள்ள ஐ. நா. பணிமனை முன்பாக நேற்று மக்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கோயில் வீதியில் இடம்பெற்ற இந்தப்

11

## இலங்கையை ஐ.சி.சி.இல் பாரப்படுத்த வேண்டும்!

### வோல்கர் டர்க்கிடம் கூட்டாக மனு

யாழ்ப்பாணம், ஜூன் 26

இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர் குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் கூட் டாக கையொப்பமிட்ட இந்த மனு, நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த ஐ. நா. மனித

11



## மனித உரிமைகள் ஆணையர் செம்மணியில் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் செம்மணி அணையா விளக்கு போராட்டத்திலும் பங்கேற்றார். அங்கு அவர், கொல்லப்பட்டோருக்காக மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

அத்துடன், போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடமும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடமும் அவர் கலந்துரையாடினார். இதைத் தொடர்ந்து, போராட்டக்காரர்களால் தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை மனு ஒன்றும் மனித உரிமைகள் ஆணையரிடம் கையளிக்கப்பட்டது.

11

## அரியாலை புதைகுழியில் 2ஆம் கட்ட அகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 26

அரியாலை (செம்மணி) மனித புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் இன்றைய தினம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

11

## யாழ். வந்த வோல்கர் டர்க் பல தரப்பினரை சந்தித்தார்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூன் 26

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் பல இடங்களுக்கும் சென்று, பல்வேறு தரப்பினரையும் சந்தித்தார்.

உலங்கு வானூர்தி மூலம் யாழ். மத்திய

11

## மயிலிட்டியை கைவிட்டு சென்ற மக்கள் இன்று போராடுகின்றனர்

### அமைச்சர் சந்திரசேகர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 26

“மயிலிட்டியை கைவிட்டு சென்ற மக்கள், இன்று போராடி வருகின்றனர். 37 வருடங்களாக அந்த மக்களுக்கு உள்ள பிரச்னை நிச்சயம் தீர்க்கப்படும்”, இவ்வாறு கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிக்குளம் பிரதேச சபை ஐக்கிய மக்கள் சக்தி வசம்!

## உபதவிசாளர் பதவி தமிழ் அரசிடம்

வவுனியா, ஜூன் 26

வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆதரவுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ஐக்கிய மக்கள் சக்தி) உறுப்பினர் தாஜூதீன் முகமது இம்தியாஸ் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப தவிசாளராக தமிழ் அரசு கட்சியின் தேவசகாயம் சிவனாந்தராசா போட்டியின்றி தெரிவாகியுள்ளார்.

செட்டிகுளம் பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி தலைமையில் நேற்று நடைபெற்றது.

பகிரங்க வாக்கெடுப்பாக நடந்த இந்தத் தெரிவில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் இம்தியாஸ் 11 வாக்குகளையும் தேசிய மக்கள் சக்தியின் தாவீது இசையாஸ்மிரால் 6 வாக்குகளையும் பெற்றனர். இதன்படி, முகமது இம்தியாஸ் புதிய தவிசாளராக தெரிவானார். தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்பன அவரை ஆதரித்திருந்தனர்.

உப தவிசாளருக்கான தெரிவில் தேவசகாயம் சிவானந்தராசா போட்டியிட்டார். வேறு பெயர்கள் பரிந்துரைக்கப்படாத நிலையில் அவர் போட்டியின்றி தெரிவானார்.

இதேவேளை சுயேச்சைகுழு உறுப்பினர் ஒருவர் வெளிநடப்பு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# ஆற்று மணல் கடத்திய 3 டிப்பர் சாரதிகள் கைது!

தென்மராட்சி, ஜூன் 26


தரை மணல் கொண்டு செல்வதற்கான அனுமதியை பெற்று ஆற்று மணலை கடத்திய 3 டிப்பர்களின் சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று மதியம் யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியின் தனங்கிளப்பு பகுதியில் வைத்து குறித்த 3 டிப்பர்களை பிடித்ததுடன், அவற்றின் சாரதிகளையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

# தமிழின அழிப்பை நினைவூட்டும் பதாதைகள் யாழ். பல்கலையில்!



யாழ்ப்பாணம், ஜூன் 26

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வருகையையொட்டி யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழின அழிப்பு பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

நாட்டுக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்க் டர்க் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

இதன்போதே தமிழினப் படுகொலையை வெளிக்காட்டும் விதமாக யாழ். பல்கலைக்கழக முன்றலில் பதாதைகள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. (ஐ)

# நீதிக்கான போராட்டத்தை சுயநல அரசியலுக்கு பயன்படுத்த முயற்சி

## அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், ஜூன் 26

செம்மணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'அணையா விளக்கு' போராட்டத்துக்கு நாம் முழு ஆதரவையும் வழங்குகின்றோம். அதேபோல நீதிக்கான இந்தப் போராட்டத்தை ஒரு சில கும்பல் சுயநல அரசியலுக்காக பயன்படுத்த முற்படுகின்றன என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

செம்மணி போராட்டம் தொடர்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், செம்மணி போராட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையிலேயே சம்பவ இடத்துக்கு சென்றிருந்தேன். செம்மணி புதைகுழிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாரென்பது மக்களுக்கு தெரியும். இந்த கொலைகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் மக்கள் எம்மிடமும் கூறியுள்ளனர். எனவே, எங்களுக்கும், அதற்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது.

செம்மணியில் இன்று குழப்பம் விளைவித்த இளைஞர்கள் சிலர், செம்மணி புதைகுழி சம்பவங்கள் நடந்த காலகட்டத்தில் பிறந்திருந்தார்களா என்பதுகூட தெரியாது. இப்படியானவர்களே அரசியல்வாதிகளை விரட்டியடிக்கும் செயலில் ஈடுபட்டனர்.

அணையா விளக்கு போராட்டத்தை ஆரம்பிக்கிறோம், அதில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்தனர். ஆளும் கட்சியினரும் பங்கேற்க வேண்டும் என சமூக வலைத்தளங்கள் ஊடாக மக்கள் கருத்துகளை முன்வைத்து வந்தனர்.

ஓர் அமைச்சராக நான் போராட்டத்தில் பங்கேற்பது அந்தப் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் என்பதே உண்மை. அந்த செய்தி சர்வதேசம் வரை செல்லும். அந்தவகையில் மக்களை சந்திப்பதற்காக இன்று நான் செம்மணிக்கு வந்தபோது ஒரு சில கும்பல், தமது அரசியல் இலாபத்துக்கு குழப்பம் விளைவித்தனர்.

இது தொடர்பில் மக்கள் மத்தியிலும் கேள்வி எழுந்துள்ளது. மக்களின் மனநிலை என்னவென்பதும், அவர்களின் வலி வேதனையும் எங்களுக்கு தெரியும்.

செம்மணியில் குழப்பம் விளைவிக்கப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். செம்மணியில் மட்டும் அல்ல நாட்டில் மேலும் பல இடங்களிலும் புதை குழிகள் உள்ளன. எமது கட்சி தலைவர் உட்பட தோழர்களும் கொன்று புதைக்கப்பட்டனர். இப்படியான சம்பவங்களுக்கு நீதி வேண்டும். அதற்கான தேடலை நோக்கியே நாம் பயணிக்க வேண்டும்.

இனவாதம், மதவாத மற்றும் பிரதேச வாதத்துக்கும், பிரித்தாளும் சூழ்ச்சிக்கும் எமது ஆட்சியில் முடிவு கட்டப்பட்டுள்ளது.

ஒரு சிறு கும்பல் எம்மை, விரட்ட முற்பட்டாலும் நாம் குரோத மனப்பான்மையுடன் செயல்படப்போவதில்லை - என்றார். (ஐ)

# ஆணிக்கட்டையை வீசி டிப்பரை தடுத்த பொலிஸ்!



தென்மராட்சி, ஜூன் 26

டிப்பர் வாகனத்தின் ரயருக்கு ஆணிக்கட்டைகளை போட்டு சட்டவிரோத மணல் கடத்தலை முறியடித்தனர் சாவகச்சேரி பொலிஸார்.

நேற்றுமுன்தினம் இரவு பளையிலிருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த டிப்பரை மீசாலை- புத்தூர் வீதியில் கனகம்புளியடி சந்தியில் வைத்து பொலிஸார் மறித்தனர்.

ஆனால், பொலிஸாரின் சமிக்ஞையை மீறி டிப்பர் அங்கிருந்து தப்பியோடியது. அதனைத் துரத்திச் சென்ற பொலிஸார், டிப்பர் ஆபத்தான விதத்தில் பயணிக்கவே ஆணிக்கட்டைகளை டிப்பரின் ரயருக்கு வீசினர். இதனால், ரயர் காற்றுப்போன நிலையில் டிப்பர் ஓட முடியாது நின்றது.

இந்த சமயத்தில், டிப்பரின் சாரதியும் உதவியாளரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்றவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ள அதேசமயம், மணலுடன் டிப்பர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ-03)

# மன்னாருக்கான துறைமுகம் பேசாலையில் அமைக்கப்படும்

## கடற்றொழில் அமைச்சர்

மன்னார், ஜூன் 26

இந்திய மீனவர்களின் அத்துமீறலை முற்று முழுதாக தடுக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. மன்னார் மாவட்டத்துக்கான துறைமுகம் பேசாலையில் அமையவுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பது பற்றியும் பேசப்பட்டது. அதற்குரிய [illegible] பிக்கை உள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கென துறைமுகமொன்று கிடையாது. எனவே, பேசாலையில் துறைமுகமொன்றை அமைப்பதற்கு திட்டமிட்டு, அதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகிறது. எனினும், குறித்த துறைமுகம் தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் உள்ளது. அந்த சந்தேகத்தை நாம் நீக்க வேண்டும். அரசாங்க அதிபர், அதிகாரிகள் உள்ளிட்டோர் மக்களை சந்தித்துக் கலந்துரையாடி, துறைமுகத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளிக்க வேண்டும்.

இதேவேளை, இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு தொடர்பிலும் பேசப்பட்டது. இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்துமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. - என்றார்.

# நானாட்டான் பிரதேச சபை தே.ம.ச. வசம்!

நானாட்டான் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் மற்றும் உப தவிசாளரை தெரிவுசெய்வதற்கான அமர்வு நேற்று நடைபெற்றது.

தவிசாளர் தெரிவில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அன்ரன் அன்ரூ ராஜன், இலங்கை தமிழ் அரசு கட்சி உறுப்பினர் ஜெறோம் இருதயதாஸ் ஆகியோர் போட்டியிட்டனர்.

பெரும்பான்மை வாக்குகளை பெற்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அன்ரன் அன்ரூ ராஜன் நானாட்டான் பிரதேச சபை தவிசாளராக தெரிவானார்.

உபதவிசாளர் தெரிவில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஞானராஜ் சோசை போட்டியின்றி தெரிவானார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
26.06.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# இதுதான் போராட்டமா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நாட்டுக்கு வருகை தந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் குரல்களை வெளிப்படுத்துவது இயல்பானது - அது அவசியமும் கூட. ஆனால், அவ்வாறான சூழலில்கூட மற்றவர்கள் பரிகசிக்கும் வகையில் போராட்டக்காரர்கள் என்போர் நடந்து கொள்வது தமிழ்த் தேசிய அரசியல் எந்தளவு அநாகரிகமான நிலையை எட்டிவிட்டது என்பதையே காண்பிக்கிறது. தடி எடுத்தவர் எல்லாம் தண்டல்காரர்கள் என்பது போல் தலையில் ஒரு கறுப்புப் பட்டியை கட்டுபவர்கள் எல்லாம் தமிழ்த் தேசியவாதிகள் என்பதுதான் இன்னும் அசிங்கமானது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானத்தை "துரோகியே வெளியே போ". என்று சத்தமிடுவதன் மூலம் அசிங்கப்படுவது வேறு யாரும் அல்லர் தமிழ் மக்கள்தான்.

அல்பிரட் துரையப்பாவை நோக்கி வீசப்பட்ட துரோகி என்னும் கல் இறுதியில் அனைவரின் தலையிலும் வீழ்வதில்தான் முடிவுற்றிருக்கிறது. இந்த இடத்தில் எழும் கேள்வி உண்மையிலேயே இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள் யார் - அவர்களை வழிநடத்துபவர்கள் யார்? எதற்காக இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் முடிந்துவிட்ட நிலையில்கூட தமிழ் மக்களுக்கான அரசியல் முன்னெடுப்புகளில் சிறு முன்னேற்றங்கள்கூட ஏற்படவில்லை. அதனை ஏற்படுத்தும் முயற்சியில் அனைவருமே தோல்வியை பதிவு செய்தவர்களாகவே இருக்கின்றனர்.

ஆயுத விடுதலை போராட்டத்தின்போதும் அதன் பின்னரும் தமிழ்த் தரப்புகள் தங்களுக்குள் மோதிக் கொண்டமையின் விளைவே தமிழர் அரசியல் இந்தளவுக்கு சீரழிந்தமைக்கான காரணமாகும். ஆனாலும், அந்த அனுபவங்களிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ளாத கற்றுக்குட்டிகளின் விளையாட்டுத் திடலாகவே இப்போதும் தமிழர் அரசியல் பரப்பு காட்சியளிக்கிறது. இதனை மாற்றியமைப்பது எவ்வாறு? இதனை மாற்றியமைக்காது விட்டால் தமிழர் அரசியல் உருப்பட வழியேற்படப் போவதில்லை.

ஆயுத விடுதலைப் போராட்டத்தின்போது எவ்வாறான தவறுகள் நிகழ்ந்தனவோ அதே தவறுகள்தான் ஜனநாயக அரசியல் களத்திலும் இடம்பெறுகின்றன. ஆயுத விடுதலைப் போராட்டத்தின்போது பிரதான எதிரியை விட்டுவிட்டு ஒவ்வோர் ஆயுத அமைப்புகளும் தங்களுக்குள் பலப்பரீட்சையில் ஈடுபட்டனர். யார் முன்னுரிமை வகிப்பது என்னும் பிரச்னை இயக்கங்களுக்குள் ஏற்பட்டபோது அதனை தூரநோக்குடனும் தோழமையுடனும் அணுகுவதில் இயக்கங்களால் வெற்றிபெற முடியவில்லை. முக்கியமாக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங்களின் தலைமைகளை இல்லாமலாக்கினால்தான் விடுதலைப் போராட்டத்தை முன்கொண்டு செல்லலாம் என்னும் தவறான கணிப்புக்குள் சிறைப்பட்டது. இதன் காரணமாக தடை செய்யப்பட்ட ஏனைய இயக்கங்களின் உறுப்பினர்கள் தங்களின் பாதுகாப்புக் கருதி சில முடிவுகளை எடுக்கும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகினர்.

ஜனநாயக அரசியலிலும் இவ்வாறான நிலைமை தொடர்வதுதான் கவலைக்குரியது. போராட்டம் என்னும் பெயரில் இவ்வாறான தவறான விடயங்கள் அரங்கேறும்போது, சிவில் சமூகத் தலைவர்கள் என்போர், கருத்துருவாக்கிகள் என்போர் மதத் தலைவர்கள் என்போர் அமைதியாக இருப்பது இன்னும் அசிங்கமானது. அவர்கள் இதனை தட்டிக்கேட்க வேண்டும். கண்டிக்க வேண்டும். இவ்வாறான அராஜக குழுக்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த வேண்டும். உண்மையில், இவர்கள் மக்களுக்கான போராட்டக்காரர்கள் அல்லர் தமிழ்த் தேசியத்தின் பெயரால் தமிழ் மக்களுக்குள் சீவிக்கும் மூட்டைப் பூச்சிகள்.

# அரச நிறுவனங்கள் நீதியை பாதுகாத்தால் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த முடியும்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் அண்மைய ஒரு தீர்ப்பில் சுயாதீனமான அரச நிறுவனங்கள் வகிக்க வேண்டிய பாத்திரத்தை எடுத்துக் கூறியிருக்கிறது. இஸ்ரேல், பலஸ்தீனம் பற்றிய தனது கருத்துகளை சுவரொட்டி மூலம் வெளிப்படுத்தியமைக்காக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்ட முஹம்மட் லியாவுதீன் முஹம்மட் ருஸ்டியின் வழக்கில் கோட்பாட்டு அடிப்படையிலான தலையீட்டைச் செய்தமைக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை தேசிய சமாதான பேரவை வெகுவாக மெச்சுகிறது.

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதனாலும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதனாலும் தோன்றுகின்ற ஆபத்துகளை இந்த வழக்கு தெளிவாக வெளிக்காட்டுகிறது. ருஸ்டியின் கைது இன, மத அடிப்படையிலேயே இடம்பெற்றிருக்கிறது போன்று தோன்றுகிறது. எந்தவிதமான சான்றும் இல்லாமலேயே ருஸ்டி பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறார். அவரின் சுவரொட்டியில் காணப்பட்ட சுலோகம் ஒரு குற்றச்செயலாக அமையவில்லை என்பதை பொலிஸார் ஏற்றுக்கொண்டிருக்கின்றபோதிலும், அவர் கைதுசெய்யப்பட்டு, ஒரு நீதிவான் முன்பாக முற்படுத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டார். பொலிஸாரின் உத்தியோக பூர்வ தகவல்களில் அவர் மனநிலை குழம்பியவர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார். அவர்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் அவரின் சுதந்திரத்தை தடுக்கின்றன.

குறிப்பாக, இன, மத அடிப்படையிலேயே ருஸ்டியின் கைது இடம்பெற்றிருக்கிறது போன்று தோன்றுவது கவலையைத் தருகிறது. ருஸ்டி " தீவிரவாத மயப்போக்கை " கொண்டிருக்கிறாரென பொதுப்படையான, பாரபட்சமான கற்பிதத்தின் அடிப்படையிலேயே பொலிஸார் தீர்மானித்திருப்பதை மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டறிந்திருக்கிறது. அவர் ஒரு முஸ்லிமாக இல்லாமல் இருந்திருந்தால், அவ்வாறு அவருக்கு நடந்திருக்காது என்றும் ஆணைக்குழு கூறியிருக்கிறது. சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற ஜனநாயகக் கோட்பாட்டையும் இனம் அல்லது மதத்துக்கு அப்பால் சகல குடிமக்களும் சமத்துவமான பாதுகாப்பை பெறுவதற்கான அரசமைப்பு உத்தரவாதத்தையும் பாரதூரமாக மீறுவதாக இது அமைந்திருக்கிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை அவசரமாக இரத்துச் செய்ய வேண்டிய தேவையை இந்த வழக்கு மீண்டும் ஒரு தடவை வெளிச்சத்துக்கு கொண்டுவருகிறது. பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கு அவசியமான ஒரு கருவியாக பயங்கரவாத தடைச் சட்டம் பல தசாப்தங்களாக நியாயப்படுத்தப்படடு வந்திருக்கிறது. ஆனால், உண்மையில் எதிர்ப்பை ஒடுக்குவதற்கும் சிறுபான்மை சமூகங்களை அச்சுறுத்துவதற்கும் எதேச்சையான தடுப்பு காவல்களை நியாயப்படுத்துவதற்குமான ஒரு பொறிமுறையாகவே அந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

**ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka**

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் நம்பகத் தன்மையான சான்றுகள் இல்லாமல் ஆடகளை தடுத்து வைப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், நீதிமன்ற விசாரணைகளின்போது குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாமல் இறுதியில் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. பயங்கரவாத தடைச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதன் ஒடுக்குமுறை அம்சங்களை வேறுபட்ட பெயர்களில் மீண்டும் அறிமுகப்படுத்தக் கூடிய ஒரு சட்டத்தால் பயங்கரவாத தடைச் சட்டம் பதிலீடு செய்யப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டை தேசிய சமாதான பேரவை மீணடும் வலியுறுத்துகிறது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை ஆதரிக்கும் நாம் அவற்றை தாமதமின்றி நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக, ருஸ்டியின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமைக்காகவும் அவரது நற்பெயருக்கும் வாழ்வாதாரத்துக்கு ஏற்பட்ட பங்கத்துகாகவும் ஆணைக்குழு கேட்டிருப்பதை போன்று அவருக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று நாம் கோருகிறோம். சட்டத்தை நடை முறைப்படுத்தும் அரச அமைப்புகளால் ஆட்கள் இன,மத அடிப்படையில் சோதனை செய்யப்படுவதை தடுக்கக்கூடிய தெளிவான உத்தரவாத ஏற்பாடுகள் நிறுவப்பட வேண்டும் என்றும் நாம் கோருகிறோம்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மிகுந்த உன்னிப்பான விசாரணையும் சட்ட நியாயப்பாடும் நிறுவன நேர்மைக்கு ஒரு வகை மாதிரியானதாக விளங்குகின்றன. கடந்த காலத்தில் அரச பொறுப்புக்கூறல்மீதான மக்களின் நம்பிக்கை மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருந்தது. தற்போது நிலைவரம் நன்மைக்கு மாறிவருகின்றது. சுயாதீனமான பொது நிறுவனங்கள் துணிச்சலுடனும் தெளிவுடனும் செயல்படும்போது பயனுறுதியுடைய மேற்பார்வையும் நீதியும் உண்மையில் சாத்தியம் என்பதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் நிரூபிக்கிறது.

ருஸ்டியின் விவகாரம் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படாத அதிகாரத்தாலும் தப்பபிப்பிராயத்தினாலும் ஏற்படக்கூடிய ஆபத்துகளையும் சகல குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதில் அரச நிறுவனங்கள் வகிக்கக்கூடிய முக்கியமான பாத்திரத்தையும் உணர்த்தி நிற்கிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். சக ஊழியர்கள் மதிப்பார்கள். தடைகள் உடைபடும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**கடகம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக பிரச்னைகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**சிம்மம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். மனநிறைவு கிட்டும் நாள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப் ஆக முடியும். லாபம் குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவை.

**தனுசு**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
வழக்கில் சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். தொட்டது துலங்கும் நாள்.

**கும்பம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.



# மன்னாரில் தந்தை செல்வாவின் சிலை உடைப்பு ஒருவர் கைது!

மன்னார், ஜூன் 26
மன்னார் நகரில் மாவட்ட செயலகம் முன்பாக அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்டது. நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தந்தை செல்வாவின் சிலைக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் தமிழ் அரசு கட்சியின் முக்கியஸ்தர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தனர்.

அத்துடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் தமிழ் அரசு கட்சியினர் அந்த இடத்துக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

இதேசமயம், இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# கட்சி பதவிகளை துறந்தார் ரவிகரன் எம். பி.

முல்லைத்தீவு, ஜூன் 26
இலங்கை தமிழ் அரசு கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்தும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் தெரிவில் ஏற்பட்ட அதிருப்தியை தொடர்ந்தே அவர் கட்சி பொறுப்புகளிலிருந்து விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தமது விலகல் தொடர்பில் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# சர்வதேச கண்காணிப்புடன் புதைகுழிகளை அகழுங்கள்

## சர்வமத பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 26
"செம்மணி மனித புதைகுழி உட்பட கண்டறியப்பட்ட அனைத்து மனித புதைகுழிகளையும் மீளவும் ஆய்வு செய்வதுடன், அந்தப் பணி சர்வதேச கண்காணிப்புடன் மிகவேகமாக நடைபெறவேண்டும்", என்று யாழ். மாவட்ட சர்வமத பேரவை தெரிவித்துள்ளது.

செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரி போராட்டம் நடைபெறும் இந்தத் தருணத்தில் யாழ். மாவட்ட சர்வமத பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், "மனித வாழ்க்கை, எமது சமய விழுமியங்களின்படி, மாண்புமிக்கது. அதனை மதிப்புடன் நோக்குவதும் அறம் மைய ஆன்மீகத்துடன் வாழ்க்கையை வாழவேண்டும் என்பதை, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் என்பன தெளிவாக விளக்கியுள்ளன. அன்புடனும் நல்லெண்ணத்துடனும் வாழ வேண்டிய நாம் எம்மவரின் எலும்புகளை செம்மணி உட்பட பல இடங்களிலும் மனிதப் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கிறோம் என்பது மிகமிக வேதனைக்குரியது. இது கடவுளுக்கு எதிரான, சமய விழுமியங்களுக்கு எதிரான கொடுமையான செயல். இந்தக் கொடுமையுடன் தொடர்புபட்டவர்கள் அனைவரும் நீதியின் முன்கொண்டுவரப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றின் 46/1 தீர்மானத்தின்படி, இனப் படுகொலை, போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைக், காலம் தாழ்த்தாது. விரைவாக சேகரிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அழைப்புவிடுக்கிறோம்.

"காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இந்த புதைகுழிகளுக்குள் எமது உறவுகள் உள்ளனரா?" எனும் கேள்வியை எழுப்புவதை சர்வ தேச சமூகம், இலங்கையில் வாழ்வோர் அனைவரும் தெளிவாக செவிமடுத்து அவர்களுக்கு நீதி கிடைக்க முழுஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வலியு றுத்துகிறோம். எமக்குத் தெரி யவந்துள்ள அனைத்து மனித புதைகுழிகளையும் மீளப் பார்ப் பதும் சர்வதேச கண்காணிப்புடன் அகழ்வாராய்ச்சி மிகவேகமாக நடைபெறவேண்டும்.

இனப் பிரச்னை தீர்க்கப்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்த விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு எடுத்துச் செல்ல உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என நாம் முன்மொழிகிறோம். நீதியில்லாமல் அமைதி இலங்கையில் மட்டுமல்ல எங்கும் சாத்தியமில்லை என்பதை இலங்கைக்கும், உலகுக்கும் வலியுறுத்த விரும்புகிறோம். இனம், சமயம், மொழி, நிறம் எனும் அனைத்து வரையறைகளையும் கடந்து, இலங்கை உட்பட உலகெங்கும் பாதிக்கப்பட்டவர்கள் நிம்மதியாக வாழவும், எதிர்கால நம்பிக்கையை இன்று விதைக்கவும், கேவலமான மனித அழிப்பிலே ஈடுபட்டவர்களுடைய மனமாற்றம் தேவை என்பதை சமய விழுமியங்களின்படி வலியுறுத்துகிறோம் - என்றுள்ளது. (ஐ)

*35 வருடங்களுக்கு பின்னர்*

# மாவை கந்தனுக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது கொடிச்சீலை!

யாழ்ப்பாணம், ஜூன் 26
வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் கொடிச்சீலை 35 வருடங்களின் பின்னர் கீரிமலை காசி விஸ்வநாதர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக நேற்று எடுத்து வரப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கான பூர்வாங்க நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை காலை 06:00 மணிக்கு நடைபெற்றன.

கீரிமலை காசி விஸ்வநாதர் ஆலயத்தில் இருந்து கீரிமலை - மாவிட்டபுரம் வீதி ஊடாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு சகல உபசாரங்களுடன் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

போர் காரணமாக தடைப்பட்டிருந்த இந்த நிகழ்வு கடந்த 35 ஆண்டுகளின் பின்னர் முதன்முறையாக நடைபெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



எதிர்வரும் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆலய பெருந்திருவிழாவில் எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளுடன் கூடிய அரசமைப்பு திருத்தம் அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 26

**நாட்டில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பாக இதனை விடவும் பரந்த பார்வையுடன் கூடிய அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ளும் தேவை காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கை நேற்று முன் தினம் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் வருகையுடன், நமது நாட்டில் மனித உரிமைகள் குறித்து ஒரு கலந்துரையாடல் எழுந்துள்ளது.

ஜனநாயக சமூகத்தில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமான அம்சமாக காணப்படுகின்றன. மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை, பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை, பெண்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், இனப் பாகுபாடுகள் காட்டாமை, வன்முறையின்மை மற்றும் சுற்றுச்சூழல் உரிமைகள் பாதுகாப்பு போன்ற உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளைப் பாதுகாப்பது ஜனநாயகத்தின் தனித்துவமான அம்சமாகும்.

நமது நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமாகும் என்பன ஊடாக யுத்தத்திற்குப் பிந்தைய காலத்திலான நல்லிணக்கம், நட்புறவு மற்றும் ஒற்றுமையை அடைய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மக்களின் குரலை ஒடுக்கும் சட்டமூலங்களைத் திருத்த வேண்டும்., பெரும்பாலான அரசியல் கட்சிகள் உடன்படுகின்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் தெளிவான மாற்றத்தைச் செய்ய வேண்டும். சுதந்திர ஊடகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இடமளிக்க முடியாது. வாழும் உரிமையை மனித உரிமையாக ஆக்க வேண்டும்- என்றார்.

(அ)

# சுற்றுலாத்துறைக்கான சட்ட வரைவை தயாரிக்க அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 26

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக சுற்றுலாத்துறையின் நிர்வாக கட்டமைப்பை மேலும் பலப்படுத்தி, எண்ணக்கரு பத்திரத்துக்கு அமைய சட்ட வரைபை தயாரிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2005 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலாத் துறைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டத்தை அறிமுகம் செய்வதற்காக 2025-01-20 திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையின் கொள்கை ரீதியான



ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட அறிஞர்கள் குழு தயாரித்துள்ள எண்ணக்கரு பத்திரத்துக்கு அமைய சட்ட வரைபை தயாரிக்க நடவடிக்கை எடுக்க சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்பபித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது-என்றார்.

(அ)

# யாசகம் பெறும் சிறுவர்கள் தொடர்பில் புதிய தீர்மானம்

கொழும்பு, ஜூன் 26

சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தல் தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைக் கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடுத்தல் குறித்த சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கமைய 18 வயதுக்குக் குறைவான அனைவரும் சிறுவர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது.

புதிய புள்ளிவிபரங்களுக்கமைவாக, நாட்டிலுள்ள மொத்த சனத்தொகையில் 30 சதவீதமானவர்கள் சிறுவர்களாவர்.

ஒருசில சிறுவர்கள் பல்வேறு காரணங்களால் ஏதேனுமொரு தொழில் செய்வதற்கு உந்தப்படுவதும், தமது தாய் தந்தையுடன், மனித வியாபாரத்திற்கு இரையாகி வீதியோர சிறுவராக பெற்றோர் அல்லாதவர்களுடன் பொது இடங்களில் யாசகத்தில் ஈடுபடுத்தப்படுவதாகவும், பல்வேறு பொருட்கள் விற்பனையில் ஈடுபடுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, 16 வயதுக் குட்பட்ட பிள்ளைகளை யாசகத்தில் ஈடுபடுத்தல் பல்வேறு பொருட்களை விற்பனை செய்வதற்கு ஈடுபடுத்தல் மற்றும் 16-18 இற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் வீட்டுப் பணி உள்ளிட்ட அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதை 2025.07.01ஆம் திகதி தொடக்கம் முழுமையாகத் தடைசெய்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளை அந்தந்த அதிகாரிகள் மூலமாக கடுமையாக அமுல்படுத்துவதற்கும், அது தொடர்பான விரிவான பரப்புரை வேலைத்திட்டத்தின் மூலம் பொதுமக்களைத் தெளிவுபடுத்துவதற்கும் மகளிர் மற்றும் சிறுவர் விவ கார அமைச்சால் சமர்பிக்கப் பட்டுள்ளமையால் குறித்த அமைச்சுக்கு உடன்பாட்டை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

(அ)

# ஜயவர்தனபுர பல்கலை விடுதியை சேதப்படுத்திய பத்து மாணவர்களிடம் தேவையற்ற பணம் அறவீடு

கொழும்பு, ஜூன் 26

ஜயவர்தனபுர பல்கலைக்கழக விடுதியை சேதப்படுத்திய பத்து மாணவர்களிடம் நிர்வாகத்தினர் தேவையற்ற விதத்தில் பணம் அறவிட்டுள்ளமை கோப் குழுவில் தெரியவந்தது.

ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் தொடர்பான 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தலைமையில் அண்மையிலகூடியபோதே இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டது. அவ்வாறு சேதமடைந்த பல்கலைக்கழக சொத்துக்களின் பெறுமதியில் மூன்று மடங்கை சட்டரீதியாக அறிவிட்டு, இதற்கு மேலதிகமாக 25 வீதம் வசூலிக்கப்பட்டிருப்பதாகவும் குழு சுட்டிக்காட்டியது.

கணக்கீடுகளில் அடிப்படையில் அறவிடப்பட்ட தொகையில் ஏதேனும் பிழைகள் இருந்தால் அதனைச் சரி செய்யத் தயாராக இருப்பதாகப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் குழுவிடம் தெரிவித்தார்.

இதற்கமைய, மோதலுடன் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பில் ஒரு தரப்பு மாணவர்களிடம் மாத்திரம் இவ்வாறு தண்டப்பணம் அறவிடப்பட்டிருப்பது எந்தளவுக்கு நியாயமானது என்பதை மறுபரிசீலனை செய்யுமாறும் கோப் குழுவில் தலைவர் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

பணியாளர்களின் கட்டமைப்பு, பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமை, கட்டுமானத் துறையில் தற்போதைய மற்றும் கடந்த கால நிலைமைகள், மாணவர்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் இடையிலான உறவை மாணவர்களுக்கு சாதகமான மட்டத்தில் பராமரிக்க வேண்டியதன் அவசியம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதற்கு அமைய, பல்கலைக்கழகத்தில் முழுநேர பதவியான பிரதான கணக்காளர் பதவியில் பணியாற்றுபவர் ஒரு தனியார் நிறுவனத்தின் நிர்வாகத் தரமற்ற பணிப்பாளராகப் பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதும் இங்கு தெரியவந்தது.

இந்தக் கணக்காளர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு திட்டத்தில் பணிபுரிய விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் தெரிவித்தார். முழுநேரப் பதவியில் பணியாற்றும் ஒருவரை அமைச்சுடன் கலந்துரையாடாமல் வேறிடத்தில் பணியாற்றுவதற்கு அனுமதித்தமை சிக்கலுக்குரியது என்றும் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

பல்கலைக்கழகப் பணிகளுக்கு எந்த இடையூறும் ஏற்படாத வகையில் பணியாற்ற பிரதான கணக்காளர் விடுவிக்கப்பட்டதாகப் பதிவாளர் தெரிவித்தார். இருப்பினும், பிரதான கணக்காளர் எடுத்த விடுமுறைகள் தொடர்பில் குழுவின் குழுவுக்குத் தெரியப்படுத்தி னார்.

(அ)

# ஹொரணை - கொழும்பு தனியார் பஸ்கள் சேவையிலிருந்து விலகல்

கொழும்பு, ஜூன் 26

ஹொரணை - கொழும்பு வழித்தடம் இலக்கம் 120இல் இயங்கும் தனியார் பேருந்துகள் நேற்று சேவையிலிருந்து விலக தீர்மானித்தன.

வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், முறையான நடைமுறைகளை பின்பற்றாமல், மில்லேவை ஹொரணை வழியாக கொழும்பு வரை புதிய பேருந்து சேவையை ஆரம்பிக்க முயற்சித்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹொரணை - கொழும்பு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜனக குணசிறி கூறுகையில்-இதற்கு தீர்வு கிடைக்காவிட்டால், எதிர்காலத்தில் ஏனைய வழிடத் தடத்தையும் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறதுஇதற்கிடையில், ஹொரணை - கொழும்பு பாதையில் உள்ள நேர அட்டவணைப் பதிவாளர்கள் முறையாக கடமைகளை ஆற்றாததுடன், அநியாயமாகவும் சட்டவிரோதமாகவும் பணம் வசூலிக்க முயற்சிப்பதாகவும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# ஒன்லைன் மூலம் வரி அறிக்கையை முன்வைப்பது தொடர்பில் செயலமர்வு

கொழும்பு, ஜூன் 26

ஒன்லைன் முறையின் கீழ் வரி அறிக்கையை முன்வைப்பது உள்ளிட்ட வரி அறவீடு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களை விளிப்புணர்வூட்டும் செயலமர்வு அண்மையில் பாராளுமன்றத்தில் இடம் பெற்றது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வரி அறவீடு தொடர்பில் பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமான இந்தச் செயலமர்வில் வளவாளர்களாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகம் பி.கே.எஸ். சாந்த உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற சட்டவாக்கப் பணிப்பாளரும், தொடர்பாடல் பதில் பணிப்பாளருமான எம். ஜயலத் பெரேரா உள்ளிட்டோரும் இதில் கலந்துகொண்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் என்னை தேடிய நாட்களில் நான் எனது வீட்டில்தான் இருந்தேன்!

## தேசபந்து தென்னக்கோன் சாட்சியம்



கொழும்பு, ஜூன் 26

**“2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் என்னை தேடிய நாட்களில் நான் எனது வீட்டில் தான் இருந்தேன்” என தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோன் விசாரணை குழுவில் தெரிவித்துள்ளார்.**

பொலிஸ்மா அதிபர் ரி.எம். டபிள்யூ.தேசபந்து தென்னக்கோனால் மேற்கொள்ளப்பட்ட துர்நடத்தை மற்றும் பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசாரணை குழு முன்னிலையில் ஆஜராகியிருந்தபோதே தேசபந்து தென்னக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேசபந்து தென்னக்கோன் மேலும் தெரிவிக்கையில்-

2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி மாத்தறை, வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் தொடர்பில் என்னை கைது செய்யுமாறு கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி மாத்தறை நீதிமன்றம் பிடியாணை உத்தரவை பிறப்பித்திருந்தது.

பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட வேளையில் நான் குருணாகல் - கிரியுல்ல பிரதேசத்தில் உள்ள எனது வீட்டில் தான் இருந்தேன்.

ஆனால் பொலிஸார் என்னை தவறான இடங்களில் தேடினர்.

குருநாகல் - கிரியுல்ல பிரதேசத்தில் உள்ள எனது வீட்டில் மின்சார வசதி இல்லை. இதனால் நான் அங்கு தங்கியிருந்த நாட்களில் மெழுகுவர்த்திகளை பயன்படுத்தினேன்.

நான் அந்த வீட்டில் தனியாக தான் இருந்தேன்-என்றார்.

தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோனால் மேற்கொள்ளப்பட்ட துர்நடத்தை மற்றும் பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் குறித்த விசாரணை குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் தேசபந்து தென்னக்கோன் சார்பில் 15 சாட்சிகளிடமிருந்து சாட்சியங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றன. விசாரணை குழு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மீண்டும் கூடும்.

(அ)

# புதிய நியமனங்களுக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 26

நான்கு அரச நிறுவனங்களின் தலைவர்களின் நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அண்மையில் அனுமதி வழங்கியது.

அந்தக் குழு கடந்த 20ஆம் திகதி பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தலைமையில் கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

அதற்கமைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தலைவராக சோமசிறி ஏக்கநாயக்க, இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவராக பீ.ஏ.பி.கே.ஆர். பமுணு ஆரச்சி, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக எம்.ஆர்.எச். சுவர்ணதிலக்க மற்றும் பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனியின் தலைவராக எஸ். நேசராஜன் ஆகியோரின் நியமனங்களுக்கு உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டது. (அ)

# ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தியை மேம்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 26

மிளகு, கோப்பி, பாக்கு, கொக்கோ, கராம்பு, சாதிக்காய், ஏலக்காய், வனிலா, வெற்றிலை, தேசிப்புல், காவட்டம்புல், கொடுக்காய் புளி, மஞ்சள் மற்றும் , இஞ்சி போன்ற 14 ஏற்றுமதிப் பயிர்களை மேம்படுத்துவதற்குத் தேவையான அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஏற்றுமதி விவசாய திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது 82,000 ஹெக்ரயார் நிலப்பரப்பில் இப்பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றதுடன், ஒருமில்லியன் பங்காளர்கள் ஏற்றுமதி விவசாயப் பயிரிடல் மற்றும் தொழிற்றுறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தால் 2025 ஆண்டு தொடக்கம் பங்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்காணும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், இவ் வேலைத்திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கையாளர்களும், ஏனைய பங்காளர்களும் மேற்கொள்கின்ற முதலீடுகளில் 50வீத உயர்ந்தபட்ச பயன்களை வழங்குவதற்கும், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# நீர்ப்பாசனத் திட்டங்களை மறுசீரமைக்க ஏற்பாடுகள்

கொழும்பு, ஜூன் 26

கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக உலர் வலயத்தின் பிரதான நீர்ப்பாசனத் திட்டங்கள் சிலவற்றுக்கு பலத்த மோசமான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளமையால், குறித்த உத்தேசத் திட்டங்களிலுள்ள விளைச்சல் காணிகளுக்கான நீரை வழங்குவதில் பெரும் தடைகள் மேலெழுந்துள்ளன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற அம்பாறை மாவட்டத்தின் கல்லோயாத் திட்டம், பொலன்னறுவை மாவட்டத்தின் மின்னேரியா மற்றும் கிரித்தலே நீர்ப்பாசனத் திட்டம் மற்றும் அனுராதபுரம் மாவட்டத்தின் ஹ/ருலு வாவி மற்றும் ,ராஜாங்கனை போன்ற நீர்ப்பாசனத் திட்டங்களிலுள்ள கால்வாய்த் தொகுதிகளை மறுசீரமைப்புச் செய்வதற்காக 2025ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 2000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிதியைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட நீர்ப்பாசனத் திட்டங்களில் கீழ்க்காணும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் பெயரைப் பயன்படுத்தி பண மோசடி !

கொழும்பு, ஜூன் 26

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின் பெயரைப் பயன்படுத்தி போலி சமூக ஊடகக் கணக்கு ஒன்று தொடங்கப்பட்டுள்ளமை தொடர்பில் அந்த மிருககாட்சிசாலை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இலங்கை தேசிய மிருகக்காட்சிசாலை” என்ற போலி சமூக ஊடகக் கணக்கைப் பராமரித்து, மிருகக்காட்சிசாலையின் நற்பெயரை தவறாகப் பயன்படுத்தி பேஸ்புக் கணக்கு பயனர்களிடமிருந்து பணம் பெறப்படுகின்றமை தொடர்பில் தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பேஸ்புக் கணக்குடன் தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு எந்த தொடர்பும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய மிருகக்காட்சிசாலை, தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் ஆண்டு நிறைவையொட்டி ஒரு சீட்டிழுப்பு நடத்தப்படும் என்றும், சீட்டிழுப்பின் முடிவில் வெற்றியாளர்களுக்கு பல்வேறு பரிசுகள் வழங்கப்படும் என்றும் கூறி பணம் பெறப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மிருகக்காட்சிசாலை தெரிவித்துள்ளது.

அதன்படி, மிகுந்த புகழ் பெற்றுள்ள தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின் நற்பெயரையும் நம்பகத்தன்மையையும் சேதப்படுத்தும் இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு மிருகக்காட்சிசாலையின் பணிப்பாளர் நாயகம் ஆர்.சி. ராஜபக்ஷ கடிதம் மூலம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

அதன்படி, சமூக ஊடகங்கள் மூலம் மிருகக்காட்சிசாலையின் பெயரைப் பயன்படுத்தி செய்யப்படும் இந்த நிதி மோசடி குறித்து கவனம் செலுத்தி, இதை விரைவில் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் பணிப்பாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தந்தையின் கத்திகுத்தில் 25 வயது மகள் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 26

தந்தையின் கத்திக்குத்துக்கு இலக்காகி மகள் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இரத்தினபுரி - படஹேன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இதில், 25 வயதுடைய மகளே இவ்வாறு காயமடைந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

காயமடைந்த 25 வயதுடைய மகள் தனது கணவர் மற்றும் ஒரு வயது மகனுடன் தனது தந்தையின் வீட்டுக்கு சென்றுள்ளார். கடந்த 22ஆம் திகதி இரவு தந்தை மதுபோதையில் வீட்டுக்கு வந்துள்ளார்.

இந்த நிலையில், தந்தைக்கும் மகளின் பாட்டியாருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன்போது, பாட்டியாரை தந்தை கத்தியால் குத்த முனைந்துள்ளார். பாட்டியை காப்பாற்ற முனைந்தபோது மகளுக்கு கத்தியால் குத்து விழுந்துள்ளது.

காயமடைந்த மகள் ஹொரணை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, தலைமறைவான நபர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் சடலங்கள் மீட்பு!

கொழும்பு, ஜூன் 26

மீதெனிய, தொரகொலயா பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 25 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படுகிறது.இந்த துப்பாக்கிச் சூடு நேற்றுக்காலை நடந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டின் நோக்கம், சூப்பாக்கிச் சூடு மேற்கொண்ட நபர்கள் குறித்த விவரம் இன்னும் வெளியாகவில்லை.

மித்தெனிய பொலிஸாருடன் இணைந்து இதுதொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. (அ)

# அபாயகரமான ஔடத கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 26

நச்சுக்கள், அபின் மற்றும் அபாயகரமான ஔடத கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்ய, அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

நச்சுக்கள், அபின் மற்றும் அபாயகரமான ஔடத கட்டளைச் சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சமர்ப் பிக்கப்பட்ட யோசனை 2025-02-09 ஆம் திகதி நடை பெற்ற அமைச்சரவை கூட்டத் தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் தொடர்புடைய அனைத்து தரப்பினரதும் கருத்துக்களைப் பெற்று, ஆரம்ப வரைபு கருத்தாக்கப் பத்திரத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தொடர்புடைய தரப்பினரின் கருத்துக்களைப் பெற்று, நச்சுக்கள், அபின் மற்றும் அபாயகரமான ஔடத கட்டளைச் சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்ட மூலத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்பபித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்க பிரஜைக்கு நீதிமன்று ஆயுள் தண்டனை!

கொழும்பு, ஜுன் 26

2021 ஆம் ஆண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட தென்னாப்பிரிக்க பிரஜை ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மூன்று குற்றச்சாட்டுகளுக்கு குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையின்படி, குற்றம் சாட்டப்பட்டவர் மீது ஆபத்தான போதைப்பொருளை வைத்திருந்தமை, கடத்துதல் மற்றும் இறக்குமதி செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதன்படி, நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கவிந்திர நாணயக்கார, குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆயுள் தண்டனை விதித்து, மூன்று தண்டனைகளும் ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிட்டார். (அ)

# 93,486 சுற்றுலா பயணிகள் ஜுன் மாதத்தில் வருகை!

கொழும்பு, ஜுன் 26

ஜுன் மாதத்தில் இதுவரை மொத்தம் 93,486 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

சுற்றுலா மேம்பாட்டு பணியகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி,

இந்தியாவில் இருந்து மொத்தம் 27,504 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்,

இது 29.4 வீதம் ஆகும்.

மேலும், ஜுன் மாதத்தில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 7,716 பேர், சீனாவிலிருந்து 6,097 பேர், பங்களாதேஷிலிருந்து 5,035 பேர் மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து 4,594 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கிடையில், ஜுன் மாதத்திற்கான அண்மைய புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டதன் மூலம், 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 1,123,289 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில், 231,564 பேர் இந்தியாவிலிருந்தும், 111,940 பேர் ரஷ்யாவிலிருந்தும், 103,990 பேர் இங்கிலாந்திலிருந்தும் வந்துள்ளனர் என்று சுற்றுலா மேம்பாட்டு பணியகம் குறிப்பிட்டது. (அ)

# 150 நபர்களிடம் 5 கோடி மோசடி

## போலி முகவர் கைது

கொழும்பு, ஜுன் 26

வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பான பெரிய அளவிலான நிதி மோசடி குற்றச்சாட்டில் தெஹிவளையைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வாங்கித் தருவதாகக் கூறி, சுமார் 150 நபர்களிடமிருந்து கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் பணத்தை மோசடி செய்ததாக கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக குறித்த நபர் கொழும்பு மத்திய பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை கிருலப்பனை பொலிஸ் பிரிவில் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பின்னர் சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக கொம்பனித் தெரு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# சிறுவர் சுரண்டலைத் தடுக்க கடுமையாக்கப்படும் சட்டம்!

கொழும்பு, ஜுன் 26

**இலங்கை எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி முதல் சிறுவர் தொழிலாளர் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தவுள்ளது.**

மேலும் சிறுவர் சுரண்டலை ஒழிப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சியைக் குறிக்கும் வகையில், ஒழுங்கமைக்கப்பட்ட சிறுவர் கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான புதிய தரப்படுத்தப்பட்ட நடைமுறைக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மற்றும் மகளிர் விவகார அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, 2025 ஜுலை 1 முதல் ஆபத்தான சிறுவர் தொழிலாளர் முறையைத் தடைசெய்யும் தற்போதைய சட்ட விதிகளை அரசாங்கம் கடுமையாக அமுல்படுத்தத் தொடங்கும்.

சிறுவர்கள் உரிமைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ், ஒரு சிறுவர் என்பது 18 வயதுக்குட்பட்ட எந்தவொரு நபராகவும் வரையறுக்கப்படுகிறது.

தேசிய மக்கள் தொகையில் சுமார் 30 சதவீதம் சிறுவர்கள் உள்ளனர்.

இவர்களில் கணிசமான எண்ணிக்கையிலானவர்கள் பல்வேறு சமூக பொருளாதார காரணிகளால் தொழிலாளர் பணியில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

பல சிறுவர்கள் தெருவில் யாசகம் எடுப்பது, பொருட்களை விற்பனை செய்வது அல்லது வீட்டு வேலைகளில் ஈடுபடுவது போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பாலும் மனித கடத்தல் அல்லது கட்டாய உழைப்புக்கு பலியாகின்றனர்.

இந் நிலையில் இந்த புதிய நடவடிக்கை16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் தெருவில் யாசகம் எடுப்பது அல்லது வர்த்தகம் செய்வதைத் தடை செய்கிறது.

16 முதல் 18 வயதுடைய சிறுவர்கள் வீட்டு வேலை உள்ளிட்ட ஆபத்தான தொழில்களில் பணியமர்த்துவதையும் தடை செய்கிறது.

சம்பந்தப்பட்ட அமைச்சினாலா செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், இந்தச் சட்டக் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவதையும், சிறுவர் தொழிலாளர் முறையின் அபாயங்கள் மற்றும் சட்டவிரோதம் குறித்து பொது விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. (அ)

# தலைக்கவசத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜுன் 26

புளத்சிங்கள, ஹல்வத்துறை பகுதியில் பாதுகாப்பு தலைக் கவசத்தால் தாக்கப்பட்டு 30 வயதுடைய நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு நபர்களுக்கிடையில் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் அதிகரித்ததை அடுத்து இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளானவர், ஹொரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக் காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இறந்தவர் ஹல்வத்துறை பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் தொடர்பாக 23 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் புளத்சிங்கள பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (அ)

# 200 உள்ளூராட்சி நிறுவனங்களை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி!

கொழும்பு, ஜுன் 26

தேசிய மக்கள் சக்தி 200 உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்தைத் தற்போது பெற்றுள்ளது. அதாவது தனமல்வில பிரதேச சபை மற்றும் பலாங்கொடை நகர சபையை கைப்பற்றியதன் மூலம், நேரடியாக கைப்பற்றப்பட்ட 151 நிறுவனங்கள் உட்பட 200 உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தி கொண்டுள்ளது.

அத்துடன் நேற்று முன் தினம் ஐக்கி மக்கள் சக்தியால் கையகப்பற்றப்பட்ட கம்பளை நகர சபை மற்றும் பெந்தோட்டை பிரதேச சபையுடன், அக்கட்சி கைப்பற்றியுள்ள மொத்த உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 27 ஆகும். இலங்கை தமிழரசுக் கட்சி 17 உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

அதேநேரம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை தலா 3 உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்தைப் பெற்றுள்ளதுடன், ஐக்கிய தேசியக் கட்சியால் எந்தவொரு நிறுவனத்தின் அதிகாரத்தையும் பெற முடியவில்லை.

இதற்கிடையில், சுயேச்சைக் குழுக்கள் உட்பட சில கட்சிகள் 12 உள்ளூராட்சி நிறுனங்களின் அதிகாரத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டில் எரிபொருள் நெருக்கடி ஏற்படாது!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உத்தரவாதம்



கொழும்பு, ஜுன் 26

மத்திய கிழக்கில் நிலவும் நெருக்கடி காரணமாக இலங்கையில் எரிபொருள் நெருக்கடி ஏற்படாது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியளித்துள்ளது.

2 மாத காலத்திற்கான எரிபொருள் கொள்முதல் கட்டளைகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்தார்.

இது குறித்து மேலும் பேசிய அவர்,

எந்த பிரச்னையும் இல்லாமல் இன்னும் இரண்டு மாதங்களுக்கு எரிபொருளை கட்டளை செய்துள்ளோம்.

அந்த கட்டளைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இன்னும் இரண்டு மாதங்களுக்கு இலங்கையில் எந்த காரணத்திற்காகவும் எரிபொருள் பற்றாக்குறை இருக்காது.

பின்னர் எங்கிருந்து எரிபொருளைப் பெறுகிறோம் என்பதுதான் பிரச்னை.

பின்னர் போரின் தாக்கம் உள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும்.

அதேநேரம், தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி, சட்டவிரோதமாக எரிபொருள் இருப்புக்களை குவிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# போர் சூழ்நிலையால் இலங்கை எதிர்கொள்ளவுள்ள சவால்கள் குறித்து ஆராய அமைச்சரவை உபகுழு!

கொழும்பு, ஜுன் 26

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்போதைய போர் சூழ்நிலையில் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து ஆராய்ந்து அவசர நடவடிக்கை எடுக்க அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மத்தியகிழக்கு பிராந்தியத்தில் தற்போது மோசமடைந்துள்ள போர்ச்சூழல் காரணமாக தொடர்ந்துவரும் காலங்களில் இலங்கை எதிர்கொள்ளவுள்ள சவால்கள் தொடர்பாக முற்கூட்டிய தயார்நிலை இருக்க வேண்டிய தேவை பற்றி அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய, மத்தியகிழக்கு போர்ச்சூழல் தொடர்பாக ஆராய்ந்து, தாக்கங்கள் ஏற்படக்கூடிய துறைகள், தாக்கத்தின் அளவு மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் பற்றி மீளாய்வு செய்து பொருத்தமான விதந்துரைகளை வழங்குவதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றை நியமித்துள்ளது.

இதேவேளை,

குறித்த உப குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஏற்புடைய அமைச்சுக்களின் செயலாளர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடிவதையில் ஈடுபட்ட 22 மாணவர்கள் இடைநீக்கம்!

## தென்கிழக்கு பல்கலைக்கழகம் அறிவிப்பு

கல்முனை, ஜூன் 26

**தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களை பகிடிவதை செய்தனர் என்று கூறப்படும் 22 மாணவர்கள் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். ஜுனைதீன் தெரிவித்துள்ளார்.**

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு பல்கலைக்கழக பேராசிரியர்களை கொண்ட விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 22 மாணவர்களே இவ்வாறு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். ஜுனைதீன் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-01)

# ஊழல், இலஞ்சம் தொடர்பில் முறையிடுவதற்கு புதிய பிரிவு

## அம்பாறை மாவட்ட செயலகத்தில்


காரைதீவு, ஜூன் 26

தீர்வு காணப்படாத முறைப்பாடுகள், இலஞ்ச கோரிக்கை தொடர்பில் பொதுமக்கள் உடன் அறிவிக்க வசதியாக அம்பாறை மாவட்ட செயலகத்தில் உள்விவகார பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழலை தடுத்தல் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல், நெறிமுறை நிர்வாகத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இதன் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை நேரிலும் 063 205 3696 என்ற தொலைபேசிக்கு அல்லது 071 550 6030 வட்ஸ்அப் இலக்கத்துக்கு அல்லது iau.ampara.distses@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அறிவிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# போதைப்பொருள் விற்பனை; ஆணும் பெண்ணும் கைது!

மட்டக்களப்பு, ஜூன் 26

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் என்ற சந்தேகத்தில் பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 13 இலட்சம் ரூபாய் பணமும் போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.


வாழைச்சேனை - பிறைந்துரைச்சேனை பகுதியை சேர்ந்த 40 வயது பெண்ணும், மாவடிச்சேனையை சேர்ந்த 37 வயது ஆணுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் அவர்கள் நடத்தி வரும் வர்த்தக நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 13 இலட்சத்து 2 ஆயிரத்து 650 ரூபாய் பணமும் 5 ஆயிரத்து 750 மில்லிகிராம் ஹெரோயின், 5 ஆயிரத்து 670 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்துள்ளார். (ஐ)

# மண்முனை வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தி கூட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 26

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக் குழு கூட்டம் பிரதேச அபிவிருத்திக் குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கந்தசாமி பிரபு தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



குறித்த பிரதேச அபிவித்திக் குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறீநேசன், இரா. சாணக்கியன், இளையதம்பி சிறீநாத், மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம் பாக்கியநாதன், மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் உள்ளிட்ட மாநகர சபையின் உறுப்பினர்கள் துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸ் திணைக்கள உயரதிகாரிகள், உதவிப்பிரதேச செயலாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இதன் போது கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் அண்மையில் பாடசாலைகளில் உணவு விசமாகியமை தொடர்பாகவும், சட்டவிரோத கசிப்பு விற்பனையை தடுத்தல், கிராமிய விதிகள் அமைத்தல் போன்ற கல்வி, சுகாதாரம், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னை, மட்டக்களப்பு நகர் பகுதியில் காணப்படும் பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள், மாநகர சபையினால் அமைக்கப்பட்டுவரும் நூலகம் உள்ளிட்ட மேலும் பல விடையங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், புதிய திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதிகளும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# மட்டு. விபத்தில் பெண் படுகாயம்!

மட்டக்களப்பு, ஜூன் 26

வீதி சமிக்ஞைக்காக காத்திருந்த மோட்டார் சைக்கிள், காரை எரிபொருள் கொள்கலன் வாகனம் மோதியதில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு புகையிரதசந்தியில் நேற்று புதன்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு நகருக்கு எரிபொருள் கொண்டு வந்த பவுஸர் வாகனமே இவ்வாறு விபத்தை ஏற்படுத்தியது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவ்விடத்திலிருந்து வாகனங்களை அகற்றியதுடன், மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# மனித உரிமை ஆணையர் வருகை; திருமலையில் மக்கள் கவனவீர்ப்பு!

திருகோணமலை, ஜூன் 26

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் திருகோணமலை பயணத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் அவசரமான மனித உரிமைகள் நிலைமை மற்றும் குறைபாடுகளை அவருடைய கவனத்துக்குக் கொண்டு செல்லும் முகமாக கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்றைய தினம் நடைபெற்ற இந்த போராட்டத்தில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம், சிவில் அமைப்புக்கள் மற்றும் வடக்கு, கிழக்கு சமூக இயக்கம் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது, கவனவீர்ப்பில் கலந்து கொண்டோரை மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்து கலந்துரையாடினார். அத்துடன், அவர்களிடமிருந்து மனுக்களையும் பெற்று கொண்டார். (ஐ)



# போதைப்பொருள் வர்த்தகம் பெண் உட்பட மூவர் கைது!

கல்முனை, ஜூன் 26

அம்பாறையில் நீண்டகாலமாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த இளம் பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிந்தவூர் - அட்டப்பள்ளம் பகுதியில் வைத்தே இவர்கள் நேற்று முன்தினம் மாலை சாகாமம் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர். இந்தக் கைது நடவடிக்கையை நிந்தவூர் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்தனர்.

27, 32 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அத்துடன், அவர்களிடமிருந்து ஒரு தொகை ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கைதானவர்களை சம்மாந்துறை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# தேசிய சுற்றாடல் வாரத்தில் விழிப்புணர்வு பேரணி!

மட்டக்களப்பு, ஜூன் 26

தேசிய சுற்றாடல் வாரத்தை சிறப்பிக்கும் வகையில் வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலயத்தில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் பாடசாலைக்கு கிடைக்கின்ற சக்தி வலுவின் அம்சங்களான குடிதண்ணீர், மின்சக்தியை சிக்கனமாக பாவித்தல் தொடர்பான சுவரொட்டிகளை தயாரித்ததுடன் பேரணி மூலமாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் செயல்பாடும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டன.



வித்தியாலயத்தில் உள்ள 15 வகுப்பு பொறுப்பாசிரியர்களும் [illegible] இந்தத் திட்டத்துக்கு [illegible] வழங்கியிருந்தனர். பாடசாலை அதிபர் ஷல்மானுல் ஹரீஸ் ஆலோசனையின் பேரில் ஆசிரியர்களின் வழிகாட்டலில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் 400 கிலோ யுரேனியம் எங்கே?

## சோதனை அவசியம் என்கிறது சர்வதேச அணுசக்தி முகமை

தெஹ்ரான், ஜூன் 26

**ஈரான் வைத்திருந்த 400 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியத்துக்கு என்ன நடந்தது என்ற தகவல் தெரியவில்லை. இதனால், அங்கு விரைவாக சோதனை நடத்துவது அவசியம் என சர்வதேச அணுசக்தி முகமை (ஐ. ஏ. இ. ஏ.) கூறியுள்ளது.**

மின்சாரம் தயாரிக்க அணு சக்தியை பயன்படுத்துகிறோம் என்று கூறிவந்த நிலையில், அணு ஆயுத தயாரிப்பில் ஈரான் ஈடுபட்டது. இதற்காக, அணு ஆயுத பரவல் தடை சட்ட ஒப்பந்தத்திலிருந்தும் விலகியது.

இதையடுத்து, ஈரான்மீது இஸ்ரேல், அமெரிக்கா தாக்குதல் நடத்தின. இதில், ஈரானின் 3 அணு சக்தி தளங்கள் அழிக்கப்பட்டன என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், தாக்குதலுக்கு முன்னர் எடுக்கப்பட்ட செயற்கைகோள் படங்களில் ஃபர்தோ அணுசக்தி தளத்துக்கு வெளியே 16 லொறிகள் நின்றிருந்தன. தாக்குதலின் பின்னர் எடுக்கப்பட்ட படங்களில் அவை இல்லை.

இதனால், ஈரான் வைத்திருந்த 400 கிலோ எடையுள்ள 60 சதவீதம செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை வேறு இரகசிய இடத்துக்கு கொண்டு சென்று மறைத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் இந்த யுரேனியத்தை 90 சதவீதத்துக்கு செறிவூட்டினால் 10 அணு குண்டுகளை தயாரித்துவிட முடியும். அதனால் கூடிய விரைவில் ஈரானில் சோதனை நடத்துவது மிக அவசியம் சர்வதேச அணுசக்தி முகமையின் தலைவர் ரஃபேல் கிராஸி கூறியுள்ளார்.

இதனிடையே, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் அணு விஞ்ஞானி முகமது ரெசா செடேகி சாபர் என்பவர் கொல்லப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

(ஐ)



# காஸாமீதான தாக்குதல்களில் இதுவரை 56 ஆயிரம் பேர் பலி!

காஸா, ஜூன் 26

காஸாமீது இஸ்ரேல் படைகள் நடத்தி வரும் தாக்குதல்களில் இதுவரை 56 ஆயிரத்து 77 பேர் உயிரிழந்தனர். ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 848 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023 ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தியிருந்தனர். இதில், ஆயிரத்து 139 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

பணயக் கைதிகளை மீட்பது, ஹமாஸ் அமைப்பை அழிப்பது என்ற இலக்குகளில் இஸ்ரேல் காஸாமீது படையெடுத்தது. இந்தப் படையெடுப்பிலேயே 56 ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அமெரிக்காவின் தாக்குதலில் அணு உலைகள் அழியவில்லை

## அமெரிக்க ஊடகங்கள் பரபரப்பு தகவல்




வாஷிங்டன், ஜூன் 26

அமெரிக்கா நடத்திய தாக்குதலில் ஈரானின் அணு உலைகள் அழிக்கப்படவில்லை என்று அமெரிக்காவின் சி.என்.என்., தி நியூயோர்க் ரைம்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் பாதுகாப்பு உளவு அமைப்பு நடத்திய தொடக்க மதிப்பீட்டில் தாக்குதல்கள் தற்காலிக பாதிப்புகளையே ஏற்படுத்தியது. இதனால், ஈரான் ஒரு சில மாதங்களே அணு திட்டத்தில் ஈடுபட முடியாத நிலைமை உள்ளது என்றும் அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஈரானின் அணு உலைகள் தொடர்ந்து செயல்படும் வகையில் நன்றாகவே உள்ளன என்றும் செறிவூட்டப்பட்ட யுரேனிய பொருட்கள் முன்பே பாதுகாப்பாக வேறு இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் நடந்த இராணுவ தாக்குதல் வெற்றி என்று ட்ரம்ப் கூறி வந்த சூழலில், ஈரான்மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் அணு உலைகள் அழியவில்லை. அவை பாதுகாப்பாக உள்ளன என்று அமெரிக்க ஊடகங்களே செய்தி வெளியிட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

முன்னதாக, கடந்த 21ஆம் திகதி அமெரிக்க விமானங்கள் ஈரானின் 3 அணுசக்தி தளங்களை குறிவைத்து தாக்குதல்களை நடத்தின. இதில், அந்த அணு சக்தி தளங்கள் இயங்கமுடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# உணவுக்காக காத்திருந்தோர்மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல்!

## 41 பேர் பலி; 146 பேர் படுகாயம்!

காஸா, ஜூன் 26

காஸாவில் உலர் உணவுக்காக காத்திருந்த மக்கள்மீது இரு இடங்களில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 41 பேர் உயிரிழந்தனர். 146 பேர் காயமடைந்தனர். இவர்களில் 62 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று அறிய வருகிறது.

மத்திய காஸாவின் சலா அல்-தின் வீதியிலும் ரபா நகர பகுதிகளிலும் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சந்தேகத்துக்கு இடமான முறையில் தம்மை நோக்கி வந்தவர்கள்மீதே தாக்குதல் நடத்தியுள்ளதாக இஸ்ரேல் கூறியுள்ளது.



இதனிடையே, தொடர்ச்சியாக உலருணவுக்காக காத்திருக்கும் பலஸ்தீனர்கள்மீது இஸ்ரேல் படைகள் தாக்குதலை நடத்தி வருகின்றன. இவ்வாறு நடத்தப்பட்ட தாக்குதல்களில் இதுவரை 410இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஈரானில் ஆட்சி மாற்றத்தை நாங்கள் விரும்பவில்லை!

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



வாஷிங்டன், ஜூன் 26

"ஈரானில் ஆட்சி மாற்றத்தை விரும்பவில்லை. அது தேவையற்ற குழப்பத்தை உருவாக்கும்" என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப்,

"ஈரானில் ஆட்சி மாற்றத்தை நாங்கள் விரும்பவில்லை. அனைத்தும் முடிந்தவரை விரைவாக அமைதியாவதை நான் பார்க்க விரும்புகிறேன். ஆட்சி மாற்றம் என்பது குழப்பத்தை ஏற்படுத்தும். மேலும், இவ்வளவு குழப்பங்களை நாங்கள் பார்க்க விரும்பவில்லை" என்று தெரிவித்தார்.

முன்னதாக, தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் ட்ரம்ப் வெளியிட்ட ஒரு பதிவில், "ஆட்சி மாற்றம் என்ற வார்த்தையை பயன்படுத்துவது அரசியல் ரீதியாக சரியானதாக இருக்காது. ஆனால், தற்போதைய ஈரானிய ஆட்சியால் ஈரானை மீண்டும் சிறந்த நாடாக மாற்ற முடியவில்லை என்றால், ஏன் ஆட்சி மாற்றம் ஏற்படக்கூடாது?" என்று கேள்வி எழுப்பியிருந்தார். இந்தப் பதிவை வெளியிட்ட ஓரிரு தினங்களிலேயே ட்ரம்ப் இப்படி மாற்றி பேசியிருப்பது விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)

# உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்குகிறது நெதர்லாந்து!

ஆம்ஸ்ரர்டாம், ஜூன் 26

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு உதவும் விதத்தில் 20 கோடி டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 6 ஆயிரத்து 100 கோடி ரூபாய் பெறுமதியான ஆயுத தளபாடங்களை வழங்க நெதர்லாந்து இணங்கியுள்ளது.

இதில், ட்ரோன்களை கண்டறியும் ரேடர்கள் 100, வான்பாதுகாப்பு அமைப்புகளும் அடங்கும் என்று கூறப்படுகிறது.

முன்னதாக 6 இலட்சம் ட்ரோன்களை உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தை நெதர்லாந்துடன் உக்ரைன் இராணுவம் செய்திருந்தது. ஒப்பந்தத்தின்படி ட்ரோன்கள், ரேடர்கள் போன்றவை இந்த ஆண்டு இறுதிக்குள் உக்ரைனுக்கு வழங்கப்படும் என்று அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ரூபன் பிரெக்கல்மன்ஸ் கூறியுள்ளார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான டெஸ்ட் இங்கிலாந்து அபார வெற்றி!



லீட்ஸ், ஜூன் 26

பென் டக்கெட் விளாசிய சதத்தின் உதவியுடன் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி லீட்ஸ் நகரில் உள்ள ஹெட்டிங்லி மைதானத்தில் நடைபெற்றது.

முதல் இன்னிங்ஸில், இந்திய அணி 471 ஓட்டங்களும் இங்கிலாந்து 465 ஓட்டங்களும் குவித்தன. 6 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி 4ஆவது நாள் ஆட்டத்தில் 96 ஓவர்களில் 364 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக கே.எல். ராகுல் 137, ரிஷப் பந்த் 118 ரன்கள் சேர்த்தனர்.

371 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 4ஆம் நாள் ஆட்டத்தின் முடிவில் 6 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்கள் சேர்த்தது. பென் டக்கெட் 9, ஸாக் கிராவ்லி 12 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். கைவசம் 10 விக்கெட்கள் முழுமையாக இருந்த நிலையில் வெற்றிக்கு மேற்கொண்டு 350 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் கடைசி நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடியது.

ஸாக் கிராவ்லியும், பென் டக்கெட்டும் எந்தவித அழுத்தமும் இல்லாமல் சீராக ஓட்டங்களை சேர்த்தனர். துடுப்பை சுழற்றிய பென் டக்கெட் 121 பந்துகளில், 14 பௌண்ட்ரிகளுடன் சதம் விளாசினார். சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இது அவரின் 6ஆவது சதமாக அமைந்தது. மறுமுனையில் நிதானமாக விளையாடிய ஸாக் கிராவ்லி 111 பந்துகளில் தனது 17ஆவது அரைச்சதத்தை கடந்தார். இங்கிலாந்து அணி 40.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 181 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை காரணமாக ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது.

22 நிமிடங்களுக்கு பிறகு மழை நின்ற பின்னர் ஆட்டம் தொடங்கியது. ஸாக் கிராவ்லி 126 பந்துகளில், 7 பௌண்ட்ரிகளுடன் 65 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பிரசித் கிருஷ்ணா பந்தில் முதல் ஸ்லிப் திசையில் நின்ற கே.எல்.ராகுலிடம் பிடிகொடுத்து வெளியேறினார். முதல் விக்கெட்டுக்கு ஸாக் கிராவ்லி, பென் டக்கெட் இணை 42.2 ஓவர்களில் 188 ஓட்டங்கள் குவித்தது. இதையடுத்து களமிறங்கிய ஆலி போப் 8 பந்துகளில், 2 பௌண்ட்ரிகளுடன் 8 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பிரசித் கிருஷ்ணா பந்தில் போல்ட் ஆனார்.

இதைத் தொடர்ந்து ஜோ ரூட் களமிறங்கினார். 54 ஓவர்களில் இங்கிலாந்து அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 253 ஓட்டங்கள் சேர்த்து வெற்றியை நோக்கி பயணிக்க தொடங்கியது. அந்த சூழ்நிலையில் குறைந்தது 42 ஓவர்கள் மீதம் இருந்தது. இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு மேற்கொண்டு 118 ஓட்டங்கள் தேவையாக இருந்தது.

ஷர்துல் தாக்குர் வீசிய அடுத்த ஓவரில் அடுத்தடுத்து 2 விக்கெட்களை வீழ்த்தி இங்கிலாந்து அணிக்கு அழுத்தம் கொடுத்தார்.

அபாரமாக விளையாடி வந்த பென் டக்கெட் 170 பந்துகளில், 21 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 149 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷர்துல் தாக்குர் வீசிய பந்தை கவர் திசையில் அடித்த போது பதிலி வீரரான நித்திஷ் குமார் ரெட்டி பிடி எடுத்தார். இதையடுத்து களமிறங்கிய ஹாரி புரூக் லெக் திசையில் வீசிய பந்தை ஸ்டெம்புக்கு பின்புறம் தட்டிவிட முயன்றார். ஆனால், ரிஷப் பந்த் அற்புதமாக பிடி எடுத்தார்.

இதன் பின்னர் அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் களமிறங்கினார். இங்கிலாந்து அணி 58.3 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 269 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. அப்போது இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு 102 ஓட்டங்கள் தேவையாக இருந்தன. குறைந்தது 37.3 ஓவர்கள் மீதம் இருந்தன. 30 நிமிடங்களுக்கு பின்னர் ஆட்டம் மீண்டும் தொடங்கியது.

51 பந்துகளில் 33 ஓட்டங்கள் எடுத்த நிலையில், ஷூப்மன் கில்லிடம் பிடிகொடுத்து பென் ஸ்டோக்ஸ் வெளியேறினார். அடுத்து இறங்கிய ஜேமி ஸ்மித் 44 ஓட்டங்கள் எடுத்தார். இப்படியாக 82 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. (ஐ)



# ரிஷப் பந்துக்கு தண்டனை விதிப்பு

லீட்ஸ், ஜூன் 26

நடுவரின் முடிவுக்கு அதிருப்தி தெரிவித்தமைக்காக இந்திய அணியின் ரிஷப் பந்துக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி லீட்ஸில் நடந்தது. இதில், மூன்றாவது நாளில் இங்கிலாந்து துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தது.

61ஆவது ஓவரின் போது பந்தின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் பந்தை மாற்றுமாறு இந்திய அணியின் விக்கெட் காப்பாளரும் உப அணித் தலைவருமான ரிஷப் பந்த் களநடுவரிடம் கூறினார்.

பந்தை சோதித்து பார்த்த நடுவர், அதன் வடிவத்தில் எந்தவித வேறுபாடும் இல்லை. இதனால் பந்தை மாற்ற முடியாது என தெரிவித்தார். இதனால் அதிருப்தி அடைந்த ரிஷப் பந்த், நடுவரின் முன்பாகவே பந்தை மைதானத்தில் வீசினார்.

இதுதொடர்பாக கள நடுவர்களான கிறிஸ் கஃபானி மற்றும் போல் ரீஃபல், மூன்றாவது நடுவர் ஷர்புதுலா இப்னே ஷாஹித் மற்றும் நான்காவது நடுவர் மைக் பர்ன்ஸ் ஆகியோர் ஐ. சி. சியில் முறைப்பாடளித்தனர்.

இந்நிலையில் நடுவரின் முடிவுக்கு அதிருப்தி தெரிவித்த ரிஷப் பந்துக்கு ஒரு தகுதியிழப்பு புள்ளியை வழங்கப்பட்டது. (ஐ)



# உலக கிண்ண கழக உதைபந்து; செல்சீ, பிளமென்கோ வெற்றி!

நியூயோர்க், ஜூன் 26

கழக அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் செல்சீ, பிளமென்கோ அணிகள் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு சார்பில் கழக அணிகளுக்கான 21ஆவது உலக கிண்ணப் போட்டி அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில், பங்கேற்றுள்ள 32 அணிகள் 8 பிரிவாக பிரிக்கப்பட்டு, லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் நொக்-அவுட் சுற்றுக்கு தகுதி பெறும்.

நேற்றைய தினம் "டி" பிரிவில் நடந்த ஓர் ஆட்டத்தில் செல்சீ (இங்கிலாந்து), 3-0 என்ற கோல் கணக்கில் எஸ்பெரன்ஸ் ஸ்போட்டிவ்வை (துனிசியா) தோற்கடித்தது. பிளமென்கோ (பிரேசில்)- லொஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா) மோதிய ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இந்த பிரிவில் பிளமென்கோ 7 புள்ளியுடனும், செல்சீ 6 புள்ளியுடனும் 2ஆவது சுற்றுக்கு முன்னேறின. (ஐ)

# ஹம்பர்க் ரென்னிஸ் தொடர் ஓசாகா அதிர்ச்சி தோல்வி!



பெர்லின், ஜூன் 26

ஹம்பர்க் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனையான நவோமி ஒசாகா அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

ஜெர்மனியின் பேட் ஹம்பர்க் நகரில் ஹம்பர்க் ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில் நேற்றுமுன்தினம் நடந்த 2ஆவது சுற்றில் ஜப்பானின் நவோமி ஒசாகா, அமெரிக்காவின் எம்மா நவாரோவுடன் மோதினார்.

இதில் சிறப்பாக ஆடிய நவோரா 6-4, 6-4 என்ற செற் கணக்கில் வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். இதன்மூலம் முன்னணி வீராங்கனையான நவோமி ஒசாகா தொடரில் இருந்து வெளியேறினார். (ஐ)

# ஐ.சி.சி. துடுப்பாட்ட தரவரிசை; இந்திய வீரர்கள் முன்னேற்றம்!



டுபாய், ஜூன் 26

டெஸ்ட் போட்டிக்கான தரவரிசையை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இதில், இந்திய வீரர்கள் முன்னேறியுள்ளனர்.

துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் இந்தியாவின் ஜெய்ஸ்வால் 4ஆவது இடத்திலும் ரிஷப் பந்த் 7ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய அணித் தலைவர் ஷூப் மன் கில் 5 இடங்கள் முன்னேறி 20ஆவது இடத்தையும் கே. எல். ராகுல் 10 இடங்கள் முன்னேறி 38ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். [illegible] துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் இங்கிலாந்து வீரர்கள் ரூட் முதல் இடத்திலும் [illegible] ப்ரூக் 2ஆவது இடத்திலும் தொடர்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித...

போராட்டம் நடைபெறும் இடத்துக்கு செல்வதற்கு முன்னதாக அவர், அருகிலிருந்த அரியாலை சித்துப் பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப் பட்ட மனிதப் புதைகுழியையும் பார்வையிட்டார். சுமார் 30 நிமிடங்கள் அவர் அந்தப் பகுதியை பார்வையிட்டதுடன், மனித புதைகுழி தொடர்பில் வழக்கு விவகாரங்களை கையாளும் சட்டத் தரணிகளிடம் அது தொடர்பான விவரங்களையும் கேட்டறிந்தார். (ஐ)

## யாழ்.வந்த...

கல்லூரி மைதானத்தில் வந்திறங்கிய அவர், பிற்பகல் 3.30 மணியளவில் நல்லூர் - கோவில் வீதியில் அமைந்துள்ள ஐ. ஒ. எம். பணிமனையை வந்தடைந்தார். அங்கு, வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர், மத குருமார், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரை சந்தித்து கலந்துரையாடினார்.

இதைத் தொடர்ந்து, செம்மணியில் நடைபெறும் போராட்டத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தியதுடன், அங்கிருந்தவர்களுடன் உரையாடினார். அத்துடன், நேற்று மாலை 5 மணியளவில் நல்லூர் ஆலயத்துக்கு சென்ற அவர் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டார். நேற்றிரவு தமிழ் பேசும் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை யாழ்ப்பாணம் நகரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

தொடர்ந்து, வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் மற்றும் பலரையும் சந்தித்து வடக்கு நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்தார். (ஐ)

## தமிழ்மக்களின்...

வகையில் தமிழ் மக்களின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுகின்றன. இதுவும் ஓர் இன அழிப்பே. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தாங்கள் இன்றுவரை 30 ஆண்டு காலமாக தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது? தங்களால் கையளிக்கப்பட்ட உறவுகளை எம்மிடம் இன்னும் திருப்பித்தரவில்லை. இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடம் உண்மையை கண்டறிதல் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களுக்கு அரசாங்கத்துடன் ஈடுபட்டு வருகின்றோம். எனினும், இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் எதனையும் வெளிப்படுத்தாதபடியால் அரசாங்கத்தை நம்ப நாங்கள் தயார் இல்லை. இதனால் சர்வதேச அமைப்புகளையே நாங்கள் நம்பியிருக்கிறோம் - எமக்கு சர்வதேச நீதி பொறிமுறையே தேவை என்றும் கலந்துரையாடலில் பங்கேற்ற பிரதிநிதிகள் கூறினர்.

மேலும், வடக்கு, கிழக்கில் 40க்கு மேற்பட்ட மனித புதைகுழிகள் காணப்படுகின்றன. 21 புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் அங்கு ஆய்வு செய்வதற்கு சர்வதேச நிபுணர்களை அழைத்து, அவர்களின் கண்காணிப்பில் இந்த அகழ்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இவர்கள் வலியுறுத்தினர்.

இவற்றுக்கு பதிலளித்த மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், இந்த விடயங்கள் இலங்கையில் இருக்கின்றன என்பதை நான் உணர்கிறேன். இதற்கான தீர்வை அரசாங்கத்துடன் இணைந்துதான் மேற்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. இருந்தாலும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களே ஆகியுள்ள நிலையில், தொடர்ச்சியாக இந்த அரசாங்கத்தை இலங்கையில் மனித உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று வலியுறுத்துவோம். நீதி பொறிமுறை சார்ந்த விடயங்களில் அதிக கவனம் செலுத்தவேண்டியுள்ளது. இதே போன்று, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதிப் பொறிமுறையை சரியான முறையில் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அநுரகுமாரவை சந்திக்கும்போது நான் வலியுறுத்துவேன் என்றும் அவர் கூறினார். (ஐ)

## நயினை

தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறவுள்ள இந்த பெருந்திருவிழாவில் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை இரவு முத்துச் சப்பைரதம், ஜூலை 2ஆம் திகதி புதன்கிழமை இரவு கயிலை காட்சியும் நடைபெறவுள்ளன.

ஜூலை 8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு சப்பைரதத் திருவிழா, மறுநாள் புதன்கிழமை தேர்த் திருவிழா, அடுத்த நாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் கொடியிறக்கமும் நடைபெறும். 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெப்பத் திருவிழா நடைபெறும்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து தினமும் அதிகாலை 5.30 மணிக்கும் விசேட திருவிழாக்களின்போது அதிகாலை 4.30 மணிக்கும் பேருந்து சேவைகள் நடத்தப்படவுள்ளன. அத்துடன், விசேட படகு போக்குவரத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்கான உணவு, குடிதண்ணீர், சுகாதார வசிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இரவு வேளையும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

## உணர்வெழுச்சியுடன்...

மாகாணங்களின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். அத்துடன், இளையோர் பலரும் பெருந்திரளாகக் கூடியிருந்தனர்.

இதேசமயம், போராட்டத்தில் பங்கேற்றவர்கள் நேற்றைய தினம் அங்கு நடைபெற்ற கையெழுத்து போராட்டத்திலும் ஆர்வமுடன் கையொப்பங்களை வைத்தமையையும் அவதானிக்க முடிந்தது.

**கிளிநொச்சியில் கடையடைப்பு!**

இதனிடையே, இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக நேற்றைய தினம் கிளிநொச்சி வர்த்தகர்கள் கடை அடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மருந்தகங்கள், உணவகங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

**விரட்டப்பட்ட அரசியல்வாதிகள்**

அணையா விளக்கு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்றைய தினம் போராட்டத்தில் பங்கேற்ற அரசியல் தலைவர்கள் சிலர் விரட்டப்பட்டனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் நேற்றைய தினம் அங்கு சென்றபோது "துரோகியே வெளியேறு", என்று கூறினர். ஈ. பி. டி. பி. கட்சியுடன் இலங்கை தமிழ் அரசு கட்சி கூட்டு சேர்ந்தமையை காரணம் காட்டியே அவரை அங்கிருந்து வெளியேறுமாறு போராட்டத்திலிருந்த சிலர் கூச்சலிட்டனர். இதைத் தொடர்ந்து, அவர் அங்கிருந்து வெளியேறினார். எனினும், நேற்றுமுன்தினம் நடந்த போராட்டத்தில் சீ. வீ. கே. சிவஞானம் பங்கேற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, போராட்ட களத்துக்கு சென்ற கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, யாழ். மாநகர சபை உறுப்பினர் கபிலன் ஆகியோரும் அவர்களின் ஆதரவாளர்களையும் அங்கிருந்தவர்கள் விரட்டியடித்தனர்.

இதன் பின்னர், ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வருவதற்கு ஒரு சில நிமிடங்கள் முன்னதாக ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் போராட்ட களத்துக்கு வருகை தந்தார். இதனால், போராட்ட களத்தில் குழப்பம் ஏற்பட்டது. "ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வருகை தரும் நேரம் திட்டமிட்டு குழப்பம் ஏற்படுத்தும் நோக்கிலேயே இளங்குமரன் வந்துள்ளார்", என்று போராட்டக்காரர்கள் கூறினர். இதைத் தொடர்ந்து, அவரை செல்லுமாறு குரல் எழுப்பினர். இதைத் தொடர்ந்து அவரும் அங்கிருந்து சென்றார். (ஐ)

# மனித உரிமை ஆணையருடன் தமிழ் எம். பிக்கள் நேற்று சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து பேசினார்.

நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இரா. சாணக்கியன், செல்வம் அடைக் கலநாதன், சண்முகநாதன் சிறீபவானந்தராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-03)

## இலங்கையை...

உரிமைகள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது.

ஐ. ஒ. எம். பணிமனையில் நேற்றைய தினம் சிவில் சமூக அமைப்புகளை சந்தித்தபோதே இந்த மனு அவரிடம் கையளிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் மீனதான இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை கோரிய அந்த மனுவில் தமிழ்த் தேசிய பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி., இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் இணைத் தலைவர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் எம். பி., தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் ந. சிறீகாந்தா, ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன், சமத்துவ கட்சியின் பொதுச் செயலர் மு. சந்திரகுமார், ஜனநாயக தமிழரசு கட்சியின் தலைவர் கே. வி. தவராசா, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ் சிவில் சமூக அமையம், வேலன் சுவாமிகள், வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம், தமிழ் சமூக செயல்பாட்டாளர்கள், இலங்கை ஆசிரியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர். (ஐ)

## அரியாலை...

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில், கடந்த பெப்ரவரி மாதம் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அகழ்வுப் பணிகள் நடைபெற்றன.

முதல் கட்ட அகழ்வின் முடிவில் 3 குழந்தைகளின் மனித எலும்பு எச்சங்கள் உட்பட 19 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது.

அத்துடன், இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளை 45 நாட்களுக்கு முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அகழ்வு பணிக்கான செலவின பாதீடு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைத்துள்ளன. இதனால், இன்று வியாழக்கிழமை முதல் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ)

## ஐ.நா.பணிமனை..

போராட்டத்தை கட்டுப்படுத்த பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இன அழிப்புக்கு சர்வதேச நீதி கோரியும் செம்மணி, கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச தலையீட்டை வலியுறுத்தியும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி வேண்டியும் காணிகள் விடுவிப்பு உள்ளிட்ட விடயங்களை கோஷங்களாக எழுப்பியிருந்தனர். (ஐ)

## மயிலிட்டியை...

தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, இந்திய மீனவர்கள் பிரச்னை, சட்டவிரோத முறைகளை பயன்படுத்தி மீன் பிடித்தல், தென்னிலங்கை மீனவர்களின் பிரச்னைகள், மீன்பிடிக்கான இறங்கு துறைகளை புனரமைத்தல், மயிலிட்டி, பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் பிரதிநிதிகளின் கருத்துகள் பெறப்பட்டு கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, மீனவர்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது - என்று அமைச்சர் சந்திரசேகர் குறிப்பிட்டார். அத்துடன், மயிலிட்டி துறைமுகத்தை அபிவிருத்தி செய்யப் போகிறோம். நவீன திட்டங்களுக்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. நெடுந்தீவு பகுதியில் கடலரிப்பு அதிகரித்துள்ளது. அப்பகுதியில் கடல் அணைகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

காணிகள் விடுவிக்கப்படும் - அவை விடுவிக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. 37 வருடங்கள் திறக்கப்படாத வீதிகள்கூட தற்போது திறக்கப்பட்டுவருகின்றன. மிகப்பெரிய தொழில்பேட்டையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்பேட்டை மற்றும் விமான நிலையத்துக்கு தேவையான காணிகள்தவிர, ஏனையவை நிச்சயம் விடுவிக்கப்படும். மயிலிட்டியை கைவிட்டு சென்ற மக்கள், இன்று போராடி வருகின்றனர். 37 வருடங்களாக அந்த மக்களுக்கு உள்ள பிரச்னை நிச்சயம் தீர்க்கப்படும்." - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## எதிர்வரும் 30 ஆம் திகதி பராளுமன்றம் கூடுகிறது



கொழும்பு, ஜூன் 26

எதிர்வரும் 30 ஆம் திகதி திங்ககட்கிழமை பாராளு மன்றம் கூட வுள்ளது.

பிரதமரின் வேண்டு கோளுக்கிணங்க பாராளு மன்றத்தின் 16 ஆம் நிலை யியற் கட்டளையின் பிரகாரம் காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளது.

பாராளுமன்றம் கூடுவதற்கான அழைப்பாணையை சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன விடுத்துள்ளார்.

## அதிவேக நெடுஞ்சாலைகளுக்காக 200 புதிய அதி சொகுசு பேருந்துகள்!

கொழும்பு, ஜூன் 26

இலங்கை போக்குவரத்துச் சபையின் அதிவேக நெடுஞ்சாலை நடவடிக்கைகளுக்காக 200 புதிய அதி சொகுசு பேருந்துகளை வாங்குவதற்கான திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமான பேருந்துகள் இல்லாததால், இலங்கை போக்குவரத்துச் சபை தற்போது தனியார் துறைக்குச் சொந்தமான 61 சொகுசு பேருந்துகளை இலாபப் பகிர்வு அடிப்படையில் இயக்கி வருகிறது.

அந்த வகையில், இலங்கை போக்குவரத்து சபை தனது சொந்த நிதியைப் பயன்படுத்தி 200 புதிய அதிசொகுசு பேருந்துகளை வாங்க முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த திட்டத்தின்படி, 29 அதி சொகுசு பேருந்துகள் நிதி திறன் கொண்ட டிப்போக்கள் மூலம் வாங்கப்பட உள்ளன.

மீதமுள்ள பேருந்துகளை இலங்கை போக்குவரத்துச் சபை நிதியைப் பயன்படுத்தி முன்பணம் செலுத்தி வாங் கவேண்டும்.மீதமுள்ள தொகையை 5 ஆண்டுகளுக்கு மாதாந்திர தவணைகளில் செலுத்த வேண்டும். (அ)

## பயங்கரவாத தடைச்சட்டம் 3 மாதங்களுக்குள் நீக்கம்!

### அரசாங்கம் உறுதி



கொழும்பு, ஜூன் 26

பயங்கரவாத தடைச்சட்டம் இன் னும் மூன்று மாத காலப்பகுதிக்குள் நீக்கப்படும் என்று பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி யொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, பயங்கர வாத தடைச்சட்டம் நீக்கம் பற்றிய எழுப்பட்ட கேள் விக்கு பதிலளிக்கை யிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

"பயங்கரவாத தடைச்சட்டத்தை தொடர்ந்து முன் னெடுப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. நீதி அமைச்சர் தலைமையில் இவ்விவகாரத்தைக் கையாள்வதற்கு குழு வொன்று அமைக்கப்பட்டுள்ளது. மூன்று மாத காலப்ப குதிக்குள் மேற்படி சட்டத்தை நீக்க முடியும்.

அதேபோல திட்டமிட்ட குற்றச்செயல்களை கட்டுப் படுத்தவதற்கு புதிய சட்டமொன்றும் அவசியம். அதற் குரிய ஏற்பாடும் இடம்பெற்றுவருகின்றது.

அரசியல் பழிவாங்கல் நோக்கில் தடுத்து வைத்தல் உள்ளிட்ட விடயங்கள் நீக்கப்படும். ஜனநாயக வழிமு றைகளுக்கமைய புதிய சட்டம் அமையும்." - என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# உலக சமாதானத்தின் பக்கமே அரசு இருக்கும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஜூன் 26

**இஸ்ரேல் - ஈரான் யுத்த நிலையில் உலக சமாதானத்தின் பக் கமே அரசாங்கம் இருக்கும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச் சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்க ளத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் ஊடகவியலாளர் சந்திப் பின் போது ஊடகவியலாளரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில ளித்த போதே அவர் இதனை தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்ரேல் - ஈரான் யுத்த நிலை தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவையால் உப குழு அமைக்கப்படுவதற்கு முன்னரா கவே குறித்த சவாலை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகளை நாம் அரசாங்கம் என்ற வகையில் முன்னெடுத்துள்ளோம்.

அமைச்சரவை கூட்டத்தின் போது தேசிய பாதுகாப்பு சபையை கூட்டல் தொடர்பில் உரையாடப்படவில்லை. தேவை ஏற்படின் அதனை நடத்த நட டிக்கை எடுக்கப்படும். மேலும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் கடந்த நாடாளுமன்ற அமர்விலும் சந்தர்ப் பம் வழங்கப்பட்டது. ஆனாலும் பிரேரணையை முன்வைத்தவர் இன்மையால் அதனை நடத்த முடியவில்லை.

அதேபோன்று யுத்த நிலை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொட்பிலும் வினவப்பட்டது , அதற்கு பதிலளித்த அமைச்சர் ,

யுத்தத்திற்கு நாம் எதிரானவர் கள், யுத்த நிலையின் காரணமாக அப்பாவி மக்களே பாதிக்கப்படு கின்றனர் அவர்களுக்கான சேவை களே ஸ்தம்பிதம் அடைகின்றது. ஆகவே யுத்தம் முடிவுறுத்தப்பட வேண்டும் என்பதே எம்முடைய நிலைப்பாடாகவுள்ளது. உலக சமாதானத்தை முன்னிலைப்ப டத்தியே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

அதேபோன்று எம்முடைய நாட்டின் பிரஜைகள் இஸ்ரேல் மற்றும் ஈரானில் உள்ளனர். ஆகவே அந்நிய செலவாணி வருவாயில் பாதிப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது. அதேபோன்று எரிபொருள் விலை அதிகரிக்கும் அச்சுறுத்தல் நிலை காணப்படுகின்றது. மேலும் தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்படும் நிலைமையும் காணப்படுகின்றது.

மேலும் , நாம் உலக சமாதானத்தின் பக்கமே உள்ளோம். பிரச்னை அதிகரிக்கும் பக்கத்தில் நாம் இருக்கப்போவதில்லை. சமா தானத்திற்கான முயற்சி எடுக்கப்ப டும் பக்கமே நாம் இருப்போம். ஏனெனில் பொருளாதாரம் சற்று ஸ்திரத்நிலையை அடையும் நிலையில் பயணித்துக்கொண்டு இருக்கும் நிலையில் இந்த யுத்தம் எம்முடைய நாட்டிற்கு பாரிய தாக்கத்தை எற்படுத்த வல்லதாகும்.

அதேபோன்று பலஸ்தீன் தொடர்பில் நாம் முன்னைய நிலைப்பாட்டிலேயே உள்ளோம். மேலும் எம்முடைய அரசாங்கத் தின் நிலை தொடர்பில் வெளிவி கார அமைச்சு கருத்துரைத்துள்ளது- என்றார். (அ)

# மலையக தமிழரையும் ஐ.நா. கைவிடக்கூடாது!

## மனித உரிமைகள் ஆணையாளரிடம் மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூன் 26

"ஐ.நா சபையும், அதற்குள் வரும் மனித உரிமை ஆணையமும், இலங் கையில் வாழும் ஈழத்தமிழ் மக்களை கை விட்டு விட்டது. கொடும் யுத்தம் நடந்த போது ஐ. நா சபை வடக்கில் இருந்து முன்னறிவித்தல் இல்லாமல் வெளியேறி, அங்கே சாட்சியம் இல்லாத யுத்தம் நடக்க காரணமாக அமைந்து விட்டது.

இன்று யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகியும், கொலை யானோர், காணாமல் போனோர் தொடர்பில் பொறுப்பு கூறல் நடை பெறவில்லை.

அரசியல் கைதிகள் பிரச்னை முழுமையாக முடிவுக்கு வரவில்லை. யுத்தம் நடைபெற மூல காரணமாக அமைந்துள்ள இனப் பிரச்னை தீர்வுக்கு வரவில்லை.

ஆகவேதான், ஈழத்தமிழ் உடன் பிறப்புகள் ஐ.நா. சபை தங்களை கைவிட்டு விட்டதாக நினைக் கிறார்கள். ஈழத்தமிழ் மக்களை கைவிட்டதை போன்று, இந்நாட் டில் வாழும் மலையக தமிழ் மக்களையும் கைவிட்டு விட வேண்டாம் என உங்களை கோரு கிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையர் வோல்கர் டர்க்கிடம் நேரடியாக தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமை ஆணையர் வோல்கர் டர்க்கிற்கும், எதிர்க்கட்சி தலைவர்களுக்கும் இடையில் சந்திப்பு பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதன் போது தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது-

இலங்கையில் மக்கள் மத்தியில் மிகவும் பின் தங்கிய பிரிவினராக வாழ்கிறார்கள். காணி உரிமை, வீட்டு உரிமை, வறுமை, சிசு மரணம், சுகாதாரம். தொழில் நிலைமைகள் என்ற எதுவாக இருந்தாலும், அவை அனைத்திலும் மிகவும் குறை வளர்ச்சி கொண்ட மக்களாக இலங்கையில் வாழும் சமீபத்திய இந்திய வம்சாவளி மலையக மக்கள் குறிப்பாக, பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள், இருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன் இலங்கை வந்த ஐ.நா. விசேட அறிக்கையாளர் டொமொயா ஒபொகடா, தனது அறிக்கையில் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் காத்திரமாக குறிப்பிட்டு உள்ளார். அந்த அறிக்கையை அவர் உங்கள் ஐ.நா. மனித உரிமை ஆணைய கத்தின் 51வது அவைக்கு சமர்ப்பித் தார். அதை கவனத்தில் கொள்ளு மாறு உங்களை கோருகிறேன்.

இலங்கையை பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும் போது, தவறாமல் இலங்கையின் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழும் மலையக மக்கள் குறிப்பாக, பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் தொட ர்பில் கவனம் செலுத்தும் படி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் உங்களை மேலும் கோருகிறேன்.

இலங்கையில் வாழும் மலையக மக்கள் இன்னமும் முழுமையான குடி மக்களாக இந்நாட்டில் வாழ வில்லை.

இரண்டாம் தர பிரஜைகளா கவே வாழ்கிறார்கள். காணி உரிமை உட்பட உரிமைகள் உரித்தாகும் போதுதான், அவர்களது குடி உரிமை முழுமை அடையும். அதை ஐநா சபையும், அதற்குள் வரும் மனித உரிமை ஆணையமும் தெளி வாக அறிந்து கொள்ள வேண்டும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.